**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**MCOP. No. 4 / 2023, 5/2023, 7/2023**
**2025 ம் வருடம் ஏப்ரல் மாதம் 15 ம் நாள் செவ்வாய்கிழமை**

**ம.சா.2 – அழகிமீனாள்**

**எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி**

விபத்து சமயத்தில் நான் லாடனேந்தலில் இருந்து திருப்புவனத்திற்கு ஆட்டோவில் சென்று கொண்டிருந்தேன். அந்த ஆட்டோ எங்கள் கிராமத்தை சேர்ந்த ஆட்டோ ஆகும். அந்த ஆட்டோவில் விபத்து சமயத்தில் 3 பேர் பயணம் செய்தோம். விபத்து சமயத்தில் அந்த ஆட்டோவில் சுமார் 10 பேர் பயணம் செய்தோம் என்றால் சரியல்ல. விபத்து வேலம்மாள் திருமண மண்டபம் எதிரில் ஏற்பட்டது. விபத்து சமயத்தில் நாங்கள் அந்த திருமண மண்டபத்தில் நடைபெற்ற திருமணத்திற்காக சென்று கொண்டிருந்தோம். விபத்து சமயத்தில் நாங்கள் ஆட்டோவில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தோம். விபத்து சமயத்தில் எங்கள் ஆட்டோவில் மோதிய பேருந்து எங்கள் ஆட்டோவின் பின்னால் இருந்து வந்து எங்கள் ஆட்டோ வலது பக்கம் திரும்புவதற்காக இன்டிகேட்டர் போட்டு திரும்பியபோது பேருந்து வேகமாக வந்து எங்கள் ஆட்டோவில் மோதி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் சத்யா புகார் வாக்குமூலம் கொடுத்தார். என்னை போலீசார் விசாரித்த போது நான் முழு சுயநினைவுடன் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் பேருந்து மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் அது தவறாக சொல்லப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் அரசு பேருந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தது. விபத்து சமயத்தில் நாங்கள் பயணம் செய்த ஆட்டோ கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்ற போது

வலதுபுறமாக மண்டபத்திற்கு செல்வதற்காக இன்டிகேட்டர் போட்டு ஓட்டுநர் கையால் சைகை காட்டி வலது புறம் திரும்பிய போது விபத்து ஏற்பட்டது. ஆட்டோ ஓட்டுநர் எந்தவித சிக்னலும் காட்டாமல் வலது புறமாக திரும்பியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தில் சம்மந்தப்பட்ட ஆட்டோவில் காப்பீடு நிறுவனத்தை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது கணவர் காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வுபெற்றுள்ளார். நான் விபத்து சமயத்தில் ஏதாவது கிடைக்கும் வேலைக்கு செல்வேன். நான் எந்த வேலையும் பார்க்கவில்லை இல்லத்தரசியாக இருந்துவந்தேன் இந்த வழக்கிற்காக வேலை செய்வதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வருமானத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் எந்த வேலை பார்த்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு வலது பக்க விலா எலும்பு மற்றும் உடல்முழுவதும் சிறு சிறு காயங்கள் ஏற்பட்டது. நான் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் மூன்று நாள் மட்டும் சிகிச்சையில் இருந்தேன். இந்த விபத்து நான் பயணம் செய்த ஆட்டோ ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதால் இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல. ஆட்டோ ஓட்டநர் மீது எந்தவித தவறும் இல்லை. அரசுப்பேருந்து ஓட்டுநர் விபத்து சமயத்தில் போக்குவரத்து விதிகளை கடைபிடித்து மிகவும் கவனமாகவும் மெதுவாகவும் பேருந்தை ஓட்டிச்சென்றார் என்றும் ஆட்டோ ஓட்டுநர் தான் கவனக்குறைவாக சென்று பேருந்தில் மோதி விபத்தை

ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. எனக்கு விபத்தில் ஏற்பட்ட காயம் முழுவதுமாக குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு எந்த வித வருமான இழப்பும் நிரந்தர ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை

**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**MCOP. No. 4 / 2023, 5/2023, 7/2023**
**2025 ம் வருடம் ஏப்ரல் மாதம் 15 ம் நாள் செவ்வாய்கிழமை**

**ம.சா.3 – செல்வராஜ்**

**எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி**

விபத்து சமயத்தில் நான் லாடனேந்தலில் இருந்து திருப்புவனத்திற்கு ஆட்டோ ஓட்டிச்சென்றேன். அந்த ஆட்டோ சுப்பிரமணியன் என்பவருக்கு சொந்தமானது ஆகும். அந்த ஆட்டோவில் விபத்து சமயத்தில் என்னையும் சேர்த்து 4 பேர் பயணம் செய்தோம். விபத்து சமயத்தில் அந்த ஆட்டோவில் சுமார் 10 பேர் பயணம் செய்தோம் என்றால் சரியல்ல. விபத்து வேலம்மாள் திருமண மண்டபம் எதிரில் ஏற்பட்டது. விபத்து சமயத்தில் நாங்கள் அந்த திருமண மண்டபத்தில் நடைபெற்ற திருமணத்திற்காக சென்று கொண்டிருந்தோம். விபத்து சமயத்தில் நான் ஆட்டோவை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஓட்டிச்சென்று கொண்டிருந்தேன். நான் ஆட்டோ ஓட்டிச்சென்ற போது வேலம்மாள் திருமண மண்டபத்தின் எதிரிலிருந்து சாலையை கடப்பதற்காக சுமார் 2 நிமிடம் போக்குவரத்தை கவனித்தேன். நான் அவ்வாறு கவனித்த போது நான் ஓட்டிச்சென்ற ஆட்டோ கிழக்கு மேற்காக நின்றது. நான் ஆட்டோவை நிறுத்தி சாலையின் மேற்குபக்கமும் கிழக்கு பக்கமும் வாகனங்கள் வருகிறதா என்று பார்த்தேன். நான் எந்த வாகனமும் 100 அடி தூரத்தில் வரவில்லை என்றால் தான் இடது புறத்திலிருந்து ஆட்டோவை வலது புறம் ஓட்டிச்செல்ல முடியும் என்றால் சரிதான். 100 அடி தூரத்தில் வாகனம் வருவது தெரிந்தாலே நான் எனது வாகனத்தை இயக்கமாட்டேன் என்றால் சரிதான். சாலையின் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி பேருந்து வந்ததை நான் கவனிக்காமல் கவனக்குறைவாக ஆட்டோவை

திருப்பியதால் தான் எனது கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. பேருந்தின் இடது முன்பக்க பகுதி எனது ஆட்டோவில் மோதி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்து பேருந்தின் மையப்பகுதியில் ஏற்படவில்லை அதனால் அது பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவு அல்ல என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் சத்யா புகார் வாக்குமூலம் கொடுத்தார். நான் சுயநினைவுடன் என்பதால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் பேருந்து மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் அது தவறாக சொல்லப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் அரசு பேருந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தது. விபத்து சமயத்தில் நாங்கள் பயணம் செய்த ஆட்டோ கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்ற போது வலதுபுறமாக மண்டபத்திற்கு செல்வதற்காக இன்டிகேட்டர் போட்டு நான் கையால் சைகை காட்டி வலது புறம் திரும்பிய போது விபத்து ஏற்பட்டது. நான் எந்தவித சிக்னலும் காட்டாமல் வலது புறமாக திரும்பியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் ஓட்டிச்சென்ற ஆட்டோவிற்கு காப்பீடு அமலில் இருந்தது. விபத்தில் சம்மந்தப்பட்ட ஆட்டோவின் காப்பீடு நிறுவனத்தை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் விபத்து சமயத்தில் ஆட்டோ ஓட்டுநராக வேலை பார்த்து வந்தேன். எனது வருமானத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. விபத்தில் எனக்கு வலது தலை மூக்கு கண்புருவம் வலது கால் முட்டிக்கு கீழ் எலும்பு முறிவு இடது காலில் இரத்தக் காயம் வலது நெஞ்சில் எலும்பு முறிவு ஆகிய

காயங்கள் ஏற்பட்டது. நான் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் 8 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். இந்த விபத்து எனது கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதால் இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல. அரசுப்பேருந்து ஓட்டுநர் விபத்து சமயத்தில் போக்குவரத்து விதிகளை கடைபிடித்து மிகவும் கவனமாகவும் மெதுவாகவும் பேருந்தை ஓட்டிச்சென்றார் என்றும் நான் தான் கவனக்குறைவாக சென்று பேருந்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. எனக்கு விபத்தில் ஏற்பட்ட காயம் முழுவதுமாக குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு எந்த வித வருமான இழப்பும் நிரந்தர ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை